கல்விக்கான கரங்கள் - மல்லாவி
அமைப்பின் ஒழுங்குபடுத்தலில்

# வழிகாட்டல் கருத்தரங்கு 2019

**வடக்கு மாகாணப் பொதுச் சேவையின் மாகாண பொது முகாமைத்துவ உதவியாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2019**

# மொழித்திறன்

1. இலக்கணம்
2. மொழிவளம்
3. ஆக்கத்திறன்



தொகுப்பாக்கம்:

ஏ.கஜன் B.A Tamil (R)
Contact: 077 2400 707 / 076 8044 959

பதிப்புரிமை ஆசிரியருக்கே
Copyrights to Author

**மாதிரி வினாத்தாள்**

**வடக்கு மாகாணப் பொதுச் சேவையின் மாகாண பொது முகாமைத்துவ உதவியாளர் தரம்**
**III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2019**
**Open Competitive Examination for Recruitment to the post of Provincial Public Service Assistant Grade III in the Northern Provincial Public Service - 2019**

**தொகுப்பாக்கம்:**
**ஏ.கஜன் B.A Tamil (R)**


**(02) மொழித்திறன்**

இரண்டு முப்பது மணி
**Two thirty hours**

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

மிக முக்கியம்:

**விடை எழுதுவதற்குப் பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**



**விடை எழுதும் போது பின்வருமாறு இலக்கங்கள் எழுதப்படாத விடைத்தாள்கள் மதிப்பிடப்படமாட்டாது.**

**1 2 3 4**

உமது சுட்டெண்ணை இப் பக்கத்திலும் மூன்றாம் பக்கத்திலும் எழுதுக.

.....

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

.....
நோக்குனரின் முதலெழுத்துக்கள்

முக்கியம்

- இவ் வினாத்தாள் **06** பக்கங்களைக் கொண்டுள்ளது.
- விடைகளை எழுதமுன் வினாத்தாள்களைப் பக்க ஒழுங்குக்கேற்ப ஒழுங்குபடுத்துக.
- **எல்லா** வினாக்களுக்கும் விடைகளை **இத் தாளிலேயே** எழுதுக.
- இவ் வினாத்தாளுக்குரிய நேரம் **இரண்டு முப்பது மணித்தியாலங்கள்** ஆகும்.
- மண்டப மேற்பார்வையாளரின் அறிவுறுத்தலின் பின்னரே விடைகளை எழுதத் தொடங்குக.
- **உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**
- விடைகள் தரப்படாவிட்டாலும் வினாத்தாளை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.
- **கறுப்பு** அல்லது **நீல** நிறப் பேனையினால் **மாத்திரம்** விடைகளை எழுதுக. **பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.**
- இவ் வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதன் ஒளிப்பிரதியை (Photo copy) எடுத்தல் என்பன குற்றமாகும்.
- **தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கையெழுத்துக்கள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதிய விடைகள் என்பவற்றுக்கு மதிப்பீட்டின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க எண் | வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 2 | 1 - 9 | |
| 3 | 10 – 19 | |
| 4 | 20 – 28 | |
| 5 | 29 – 39 | |
| 6 | 40 - 50 | |
| மொத்தம் | | |

இறுதிப் புள்ளிகள்

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | |
|---|---|
| விடைத்தாளைப் பரீட்சித்தவர் | |
| புள்ளிகளைப் பரீட்சித்தவர் | |

- மாதிரிக்காகத் தரப்பட்டுள்ளது -

# வினாத்தாள் கட்டமைப்பு

**எழுத்துப் பரீட்சை – மொழித்திறன்**

- ***உள்ளடக்க விடயங்கள்:***
  - வெளிப்படுத்தல்
  - கிரகித்தல்
  - எழுத்துக் கோர்வை
  - மொழி மற்றும் கட்டுரை
  - தரப்படும் கடிதம் ஒன்றை வரைதல்
  - கொடுக்கப்படும் பந்திகளைச் சுருக்கி எழுதுதல்
  - சில வாக்கியங்களின் உள்ளடக்கத்தினை ஒரு வாக்கியமாக எழுதுதல்
  - எளிய இலக்கண விதிகளைப் பிரயோகித்தல்
  - கொடுக்கப்படும் தரவுகளைக் கொண்டு வரைபுகள் மற்றும் அட்டவணைகளைத் தயாரித்தல்
- ***நேரம்:*** **2 ½** ***மணித்தியாலங்கள்***
- ***மொத்தப் புள்ளிகள்:*** **100**

# இலக்கணம்

- **எழுத்துக்களும் அதன் வகைகளும்**
- **எழுத்துக்களின் பரம்பல்**
- **சொல்லின் அமைப்பு**
- **சொல்லின் வகைகள்**
- **வேற்றுமை**
- **வாக்கியமும் வாக்கிய உறுப்புக்களும்**
- **புணர்ச்சியும் அதன் வகைகளும்**

**1 தொடக்கம் 100 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1, 2, 3, 4 என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**1.** பின்வருவனவற்றுள் ஒரு மாத்திரை பெறும் எழுத்தாக **அமைவது**
1. ம் 2. ஊ 3. ∴ 4. இ

**2.** பின்வருனவற்றுள் ஒற்றளபெடையாக **அமைவது**
1. தொழாஅள் 2. படாஅ 3. திரள்ள்சேனை 4. ஓஒதல்

**3.** பின்வருவனற்றுள் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாக **அமையாதது**
1. வரகு 2. செய்து 3. வயிறு 4. தராசு

**4.** பின்வருவனவற்றுள் 'க'கரம் (க்) வேறுபட்டொலிக்கும் சொல்
1. பகல் 2. முகம் 3. திங்கள் 4. தாகம்

**5.** பின்வருவனவற்றுள் **மூன்று** மெய்கள் மயங்கிவரும் சொல் **அல்லாதது**
1. வாய்க்கால் 2. வாழ்ந்து 3. பச்சை 4. பார்த்தேன்

**6.** தமிழிலுள்ள குறில் எழுத்துக்களின் **மொத்த** எண்ணிக்கை
1. 5 2. 90 3. 133 4. 95

**7.** செத்தான் - என்பதன் **பகுதி**ச் சொல்
1. செ 2. சாவு 3. சா 4. செத்து

**8.** புளி+அம்+காய் - இங்கு **அம்** என்பது
1. பகுதி 2. சந்தி 3. விகுதி 4. சாரியை

**9.** பின்வருவனவற்றுள் காரணவிடுகுறிப் பெயர் **அல்லாதது**
1. வளையல் 2. முள்ளி 3. பறவை 4. நாற்காலி

**10.** "நேற்று வந்தவர் உன்னை விசாரித்தார்" - இங்கு **வந்தவர்** என்பது
1. வினையாலணையும்பெயர் 2. மாற்றுப் பெயர் 3. ஆக்கப் பெயர் 4. கூட்டுப் பெயர்

**11.** "கந்தன் தனது மனைவி மக்களோடு வெளியூர் சென்றிருந்தான் - இங்கு **மனைவி மக்கள்** என்பது எத்தகைய தொகையாகும்?
1. வேற்றுமைத் தொகை 2. உம்மைத் தொகை 3. பண்புத் தொகை 4. வினைத்தொகை

**12.** "உலகக் கோப்பையை இங்கிலாந்து வென்றது" - இங்கு **இங்கிலாந்து வென்றது** என்பது
1. தொழிலாகு பெயர் 2. சினையாகு பெயர்
3. காலவாகு பெயர் 4. இடவாகு பெயர்

**13.** பரீட்சைக்கு இன்னும் ஒரு வாரமே உள்ளது
முயற்சி செய்து படியுங்கள்
மேற்படி தனி வாக்கியங்களை **ஒன்றாக** இணைக்கப் **பயன்படுத்த முடியாத** இணைப்பிடைச் சொல்
1. ஆகவே 2. எனவே 3. எனினும் 4. ஆகையினால்

**14.** எட்டாம் வேற்றுமையின் பொருள்
1. உடைமை 2. விளி 3. இடம் 4. கொடை

**15.** நகர்ப்புறம் என்பதைப் **புறநகர்** என உரைப்பது
1. குழூஉக்குறி 2. இலக்கணப் போலி 3. மங்கலம் 4. மரூஉ

**16.** இடுகாட்டை **நன்காடு** எனக் கூறுதல்
1. மங்கலம் 2. இலக்கணமுடையது 3. இடக்கரடக்கல் 4. மரூஉ

**17.** பின்வருவனவற்றுள் தன்வினை வாக்கியமாக **அமையாதது**
1. நான் கம்பராமாயணம் படித்தேன்.
2. கடற்கரையில் உரல் உருளுகின்றது.
3. செயலமர்வின் போது வளவாளர்கள் சிறப்பாகப் பயிற்றினர்.
4. அவள் காலால் நடந்தாள்.

**18.** விளி வேற்றுமை ஏற்காத பெயர்
1. தம்பி 2. மனம் 3. நீ 4. தாய்

**19.** கள் விகுதி இணையும் போது அவ் விகுதியின் முதலெழுத்தை இரட்டிக்கச் **செய்யும்** சொல்
1. மாடு 2. புல் 3. காய் 4. பசு

**20.** "கேட்பதற்கு மிகவும் இனிமையான...." - இது ஒரு
1. பெயர்த் தொடர் 2. பெயரடைத் தொடர்
3. வினையடைத் தொடர் 4. வினைத் தொடர்

**21.** "பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க" - இது எவ்வகை வாக்கியமாகும்?
1. ஏவல் 2. வியங்கோள் 3. கலப்பு 4. வினா

**22.** "மூர்க்கனும் முதலையும் கொண்டது (.....?.....)" – அடைப்புக்கள் **வரவேண்டிய** சொல்
1. விடாது 2. விடமாட்டாது 3. விடான் 4. விடா

**23.** விண்வெளி, விண்கலம், சடப்பொருள் என்பன
1. வேற்றுமைத் தொகை 2. பண்பத் தொகை 3. ஆக்கப் பெயர் 4. கூட்டுப் பெயர்

**24.** "சுசீலா கணவனோடு வெளிநாடு போனது பற்றி இதுவரை எனக்கு யாரும் சொல்லவில்லை" - இவ் வாக்கியத்தின் **எழுவாய்**
1. சுசீலா 2. எனக்கு 3. யாரும் 4. வெளிநாடு

**25.** அகராதி ஒழுங்கில் **அமையாத** சொற்தொகுதி
1. வாய்க்கால் விலை, வேர்க்கடலை, வெளவால்
2. கட்டில், சட்டி, தாய், நாடு
3. ஞாயிறு, சந்திரன், சூரியன், செவ்வாய்
4. காடு, நாடு, பாடு, வாடு

**26.** "கேண்மை செய்த இன்புற்றனெம்" - இங்கு **இன்புற்றெனம்** என்பது
1. படர்க்கை வினைமுற்று
2. தன்மை வினைமுற்று
3. முன்னிலை வினைமுற்று
4. குறிப்பு வினைமுற்று

**27.** பின்வருவனவற்றுள் உயர்திணைப் பெயர்களைக் கொண்டமையும் விடை
1. அமைச்சரவை, அவைத் தலைவர், காதல்
2. அவைத் தலைவர், காதலி
3. அவைத்தலைவர், காதலி, கட்டாக்காலி
4. காதலி, கட்டாக்காலி

**28.** பன்மை உருபு பெற்று **அமையத்தக்க** சொல்
1. அன்பு
2. தண்ணீர்
3. ஊர்
4. இந்தியா

**29.** 'வ'கர உடம்படுமெய் தோன்றிப் புணர்ந்த சொல்
1. தாழ்வு
2. வறுவல்
3. சமத்துவம்
4. நழுவல்

**30.** கெடுதல், தோன்றல் விகாரங்கள் இடம்பெற்றுப் புணர்ந்த சொல்
1. பலாவிலை
2. பழச்சாறு
3. பழமரம்
4. பனையோலை

**31.** ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் எழுவாயாக **அமையப்பெற்ற** வாக்கியம்
1. ஆசிரியரோடு மாணவர்கள் வந்தனர்
2. மாணவர்கள் ஆசிரியருடன் வந்தனர்
3. ஆசிரியரும் மாணவர்களும் வந்தனர்
4. மாணவர்களுடன் ஆசிரியர் வந்தார்

**32.** பெயராகவும் வினையாகவும் **வழங்கக்கூடிய** ஒரு சொல்
1. வால்
2. தாய்
3. உண்
4. பாய்

**33.** பகுபத உறுப்புகள் ஆறும் இடம்பெற்றுவரும் சொல்
1. நடந்தான்
2. நடந்தனன்
3. படித்தனன்
4. நடப்பான்

**34.** அறிவாளி என்ற ஆக்கப்பெயரின் விகுதி
1. வாளி
2. ளி
3. ஆளி
4. அறிவு

**35.** எள் + நெய் என்பதைச் சேர்த்து எழுதினால்
1. எள்நெய்
2. எள்ளை
3. எள்ளெண்ணை
4. எண்ணெய்

# மொழிவளம்

- **ஒத்தசொல் - எதிர்ச்சொல்**
- **பால்நிலைச் சொற்கள்**
- **மரபுப் பெயர்கள்**
- **தொடர் மொழிக்கு ஒரு மொழி**
- **சொல்லும் பொருளும்**
- **கலைச் சொற்கள்**
- **பிறமொழிச் சொற்கள்**
- **நிறுத்தற் குறியீடுகள்**
- **தமிழ்த் துணையெழுத்துக்கள்**
- **பெயராகவும் வினையாகவும் வரும் சொல்**
- **ஆண்டு விழாக்கள்**
- **இணைமொழிகள்**
- **இரட்டைக் கிழவி**
- **அடுக்குத்தொடர்**
- **அடுக்கிடுக்குத்தொடர்**
- **மரபுத் தொடர்கள்**
- **உவமைத் தொடர்கள்**
- **பழமொழிகள்**
- **பிரதேசக் கிளைமொழி**
- **எழுத்துக்களின் ஒலி வேறுபாடுகள்**

**36.** மலைக்குத் தொடர் என்பது போல, **மயில்**
1. குழாம் 2. திரள் 3. நிரை 4. தொடர்

**37.** காளை முக்காரமிடும் என்பது போல, **எருமை**
1. முக்காரமிடும் 2. எக்காளமிடும் 3. கத்தும் 4. கதறும்

**38.** வரகு, தினை, நெல் என்பவற்றின் **உள்ளீடு**
1. பருப்பு 2. அரிசி 3. சோறு 4. சுளை

**39.** சிங்கத்தின் இளமைப் பெயருடன் **பொருந்தி வராதது**
1. குட்டி 2. பறள் 3. பார்ப்பு 4. குருளை

**40.** "பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம்" - இங்கு அப்பீல் என்பதற்கு **நிகரான** தமிழ்ச்சொல்
1. முறையீடு 2. குற்றச்சாட்டு 3. மேன்முறையீடு 4. பிடியாணை

**41.** "தற்காலத்தில் பெரும்பாலான கவிதைகளில் சிம்பல் (Symbol) ஒரு உத்தியாகக் கொள்ளப்படுகின்றது. இங்கு **சிம்பல்** என்பதற்கு **நிகராக**த் தமிழில் **வழங்கும்** கலைச்சொல்
1. வடிவம் 2. குறியீடு 3. படிமம் 4. சின்னம்

**42.** பின்வருவனவற்றுள் இணைமொழி **அல்லாதது**
1. பச்சைப் பசேல் 2. தோட்டந் துரவு 3. இன்னார் இனியார் 4. சூது வாது

**43. உற்சாகமூட்டல்** எனும் பொருள் தரும் மரபுத்தொடர்
1. தட்டிப் பறித்தல் 2. தட்டிக் கொடுத்தல்
3. தட்டிப் பேசுதல் 4. தட்டிப் பார்த்தல்

**44.** பின்வருவனவற்றுள் பயனற்ற செயலை **உணர்த்தும்** உவமைத்தொடர்
1. அணைகடந்த வெள்ளம் போல 2. ஆனை வாயிற் கரும்பு போல
3. ஆற்றிலே கரைத்த புளி போல 4. ஆனை உண்ட விளாம்பழம் போல

**45.** மனைவியை இழந்தவன் தபுதாரன் என்பது போல, கணவனை இழந்தவள்
1. செவிலி 2. தபுதாரி 3. விதவை 4. ஊதாரி

**46.** நகையும், பரிகாசமும் நிறையும் வகையில் கவி படிக்க வல்லவன்
1. தீர்க்கதரிசி 2. விகடகவி 3. அசகாயசூரன் 4. செவிலி

**47.** அரசனும், செல்வரும் தமக்குக்கீழ் சேவை புரியும் பணியாளர்களுக்கு நன்கொடையாகக் கொடுக்கும் நிலம்
1. அந்தப்புரம் 2. நிந்தகம் 3. அல்லங்காடி 4. நாளங்காடி

**48.** "நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாதப் பிரச்சினையை அடுத்து பாடசாலைகளுக்கு **CCTV** (சீ.சீ.ரீ.வி) கமராக்கள் பொருத்தப்பட்டன." இங்கு **CCTV** என்பதன் சரியான தமிழ் வடிவம்
1. கங்காணி 2. புகைப்படக்கருவி 3. மறைகாணி 4. எண்மானம

**49.** சினிமாத் துறையில் **எடிற்றிங் (Editing)** என்பது
1. ஒலிப்பதிவு 2. பட விநியோகம் 3. படத் தொகுப்பு 4. ஒளிப்பதிவு

**50.** குதிரை, தானியம், பொடி, பெரிய எனும் பல பொருள்களைத் **தரும்** ஒரு சொல்
1. பரி 2. கா 3. திரு 4. மா

**51.** "வாழையடி வாழையாக" என்ற அருஞ்சொற்றொடரால் உணர்த்தப்படுவது
1. பாரம்பரியத் தொடர்ச்சி 2. உபகாரத் தன்மை
3. நன்றியுணர்வு 4. மாற்றமின்மை

**52.** பின்வருவனவற்றுள் பொருளால் **வேறுபட்டு** நிற்கும் சொல்
1. வியாசம் 2. பேட்டி 3. செவ்வி 4. நேர்முகம்

**53.** "மதுரையிலே ஒரு தமிழ்ச்சங்கம் இருந்தது என்பது கர்ண பரம்பரைச் செய்தி" - இங்கு **கர்ண பரம்பரைச் செய்தி** என்பது
1. மறுதலிக்க முடியாத செய்தி
2. நிறுவப்பட்ட உண்மை வரலாறு
3. நிறுவப்பட்ட ஆனால் வழவழியாக நம்பப்படும் செய்தி
4. கர்ணனுடைய பரம்பரையால் முன்வைக்கப்பட்ட செய்தி

**54.** "இளந்தளிர்கள் சடசடவென ஒடிந்து கொண்டிருந்தன" - இங்கு **சட சட** என்பது
1. மரபுத் தொடர் 2. இணைமொழித் தொடர் 3. அடுக்குத்தொடர் 4. இரட்டைமொழி

**55.** ஒருவனுக்கு ஒரு பொருள் மீதுள்ள உரிமையைத் தெரிவிப்பதாக எழுத்துருவில் அமைந்த உறுதிப் பத்திரம்
1. சிலாசாசனம் 2. ஆவணம் 3. கல்வெட்டு 4. சான்றிதழ்

**56.** பெரியவர்கள் எந்த நிலையிலும் சிறியவர்களை விடத் தாழ்ந்து விடுவதில்லை – என்பதை விளக்கப் பொருத்தமான பழமொழி
1. எறும்பும் தன் கையால் எண் சாண் 3. யானை படுத்தாலும் குதிரை மட்டம்
2. உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? 4. வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை

**57.** பிறரை ஏமாற்றி வாழ்பவன் தனது பெருமையை இழப்பான் - என்ற பொருள் தரும் பழமொழி
1. வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை
2. சேற்றில் புதைந்த யானையைக் காகமும் கொத்தும்
3. உருட்டும் பிரட்டும் ஒடுக்கும் சிறப்பை
4. யதார்த்தவாதி வெகுசன விரோதி

**58.** நெருப்பில் விழுந்த தேள் எடுத்தவனையே கொட்டும் - என்ற பழமொழி தரும் **உட்பொருள்**
1. தேள் நெருப்பில் விழுந்துவிட்டால் அதனைக் காப்பாற்றக் கூடாது.
2. தீயவனுக்கு நன்மை செய்யப்போய் ஆபத்தை விலைக்கு வாங்குதல்.
3. தீயவனானாலும் ஒருவன் செய்த நன்றியை மறக்க மாட்டான்.
4. நெருப்பில் விழுந்த தேள் வேதனையில் எடுத்தவனையே கொட்டிவிடும்.

**59.** கடினமான காரியமானலும் அதனை மீண்டும் மீண்டும் செய்ய முயன்றால் வெற்றி பெறலாம் - என்ற கருத்தைத் தரும் **பழமொழி**
1. அடுத்து முயன்றாலும் ஆகுநாளே ஆகும்
2. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்
3. ஆரியக் கூத்தாடினாலும் காரியதத்தில் கண்ணாயிரு
4. பதறாத காரியம் சிதறாது

**60.** சேற்றில் புதைந்த யானையைக் காகமும் கொத்தும் - என்ற பழமொழி தரும் **உட்பொருள்**
1. யானைக்கும் அடி சறுக்கும்
2. தந்திரமுள்ள காக்கையால் வலிமையுடைய யானையையும் வெல்ல முடியும்
3. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்
4. உயர்ந்த நிலையிலிருந்த ஒருவர் தன்னிலை தாழும்போது மிக எளியவரும் அவரைத் துன்புறுத்துவார்.

**61. துறைபோதல்** என்ற மரபுத்தொடர் உணர்த்தும் பொருள்
1. ஐயந்திரிபறக் கற்றல் 2. குருவிடம் கற்றல்
3. மேலோட்டமாகக் கற்றல் 4. பிறநாட்டில் கற்றல்

**62.** பின்வருவனவற்றுள் **பொருத்தமற்ற** சொற்களின் இணைப்பு
1. செய்யுள் - அடி 2. சொல் - எழுத்து
3. கட்டுரை - பந்தி 4. எழுத்து – நிறுத்தற்குறி

**63.** பின்வருவனவற்றுள் மேல் விலங்குச் சுழியுடன் கூடிய எழுத்து
1. பி 2.பூ 3. பீ 4. பை

**64.** "தவணைப் பரீட்சைக்கான நேர அட்டவணை வெளியிடப்பட்டது" - இங்கு **அட்டவணை** என்ற சொல் எம்மொழிக்குரியதாகும்?
1. மலையாளம் 2. மரார்த்தி 3. உருது 4. பிரெஞ்

**65.** **சாக்குப்போக்கு** என்ற பொருளுணர்த்தும் இணைமொழித் தொடர்
1. ஆரவாரம் 2. வீண் காரணம் 3. ஒழுங்கின்மை 4. தந்திரம்

**66.** முடவன் என்பதன் **எதிர்ப் பால்நிலை**ச் சொல்
1. முடவி 2. முடத்தி 3. குருடி 4. செவிலி

**67.** ஒரு நூலை அச்சிட்டு வழங்குவோர் அந் நூல் குறித்து எழுதும் உரை
1. நூன்முகம் 2. முன்னுரை 3. பதிப்புரை 4. அணிந்துரை

**68.** சமய சார்பான விசேட தினங்களில் அன்னதானம் வழங்கும் வைபவத்தை அழைப்பது
1. யாசகம் 2. கந்தூரி 3. படையல் 4. மத்ரசா

**69.** பின்வருவனவற்றுள் அனுவாதக் குறியாக **அமைவது**
1. **“ ”** 2. **!** 3. **,** 4. **;**

**70.** கடிதம் ஒன்றின் முகவரியை எழுதும் போது அதிகளவில் பயன்படுத்தப்படும் நிறுத்தற்குறியீடு
1. **“ ”** 2. **-** 3. **,** 4. **;**

**71.** ஓரை, கன்னல், சுருங்கை என்பன எம்மொழிக்கு உரியனவாகும்?
1. மலையாளம் 2. கிரேக்கம் 3. உருது 4. ஒல்லாந்து

**72.** “ஆத்திரத்தோடு நண்பர் அவுக்கென எழும்பி இரண்டில் ஒன்று பார்ப்பது என்று பாய்ந்து வந்தார்” - இங்கு, **அவுக்கென** என்னும் ஒலிக்குறிப்புச் சொல் **உணர்த்தும்** பொருள்
1. கோபம் 2. பயம் 3. விரைவு 4. ஆச்சரியம்

**73.** அண்ணளவாக – என்ற கருத்தைத் தரும் தொடர்
1. கையுங்கணக்கும் 2. திட்டவட்டமாக 3. அரைகுறை 4. கிட்டத்தட்ட

**74.** எண்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
1. பவளவிழா 2. வைரவிழா 3. மணிவிழா 4. அமுதவிழா

**75.** பின்வருனவற்றுள் **பொருத்தமற்ற** இணைப்பு
1. தண்டனைகள் வழங்கப்படுகின்றன. இருந்தும் குற்றங்கள் குறைந்தபாடில்லை.
2. தண்டனைகள் வழங்கப்படுகின்றன. எனினும் குற்றங்கள் குறைந்தபாடில்லை.
3. தண்டனைகள் வழங்கப்படுகின்றன. எனவே குற்றங்கள் குறைந்தபாடில்லை.
4. தண்டனைகள் வழங்கப்படுகின்றன. என்றாலும் குற்றங்கள் குறைந்தபாடில்லை.

**76.** பின்வருவனவற்றுள் பல குணம் தழுவிய உரிச்சொல்லாக **அமைவது**
1. சால 2. உறு 3. கடி 4. கழி

**77.** “எனக்குத் தலை வலிக்கின்றது” - இவ் வாக்கியத்தின் **எழுவாய்**
1. எனக்கு 2. எழுவாய் இல்லை 3. நான் 4. தலை

**78.** பின்வருவனவற்றுள் பொருள் மயக்கம் **அற்ற** வாக்கியம்
1. காலஞ்சென்ற கந்தசாமியின் அப்பாவை எனக்குத் தெரியாது.
2. காலஞ்சென்ற கந்தசாமியின் அப்பாவை எனக்குத் தெரியும்.
3. கந்தசாமி காலஞ்சென்ற அப்பாவை எனக்குத் தெரியாது.
4. கந்தசாமியின் காலஞ்சென்ற அப்பாவை எனக்குத் தெரியாது.

**79.** யானையின் பெண்ணைக் குறிப்பது
1. பிடி 2. கரி 3. களிறு 4. கஜம்

**80.** “கொண்டல் வரை நிமிர்ந்த கோபுரங்கள்” - இங்கு இடம்பெற்றுள்ள **அணி**
1. உவமை 2. தற்குறிப்பேற்றம் 3. உயர்வுநவிற்சி 4. உருவகம்

**81.** “பொங்கும் மானிடம் புரட்சி அலைகளாய்
பொய்மை வேகத்தைச் சாடுகின்றோம்”
மேற்படி அடிகளில் கையாளப்பட்டுள்ள **அணி**
1. எதுகை 2. உருவகம் 3. சிலேடை 4. மோனை

**82.** பின்வருவனவற்றுள் பொருள் **வேறுபடாத** வாக்கியம்
(1)சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை அவர் அமைத்தார்.
(2)அவர் சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தார்.
(3)பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சிலவற்றை அவர் அமைத்தார்.
(4)பல சிலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை அவர் அமைத்தார்.

**83.** பின்வருவனவற்றுள் பொருள் மயக்கம் **அற்ற** வாக்கியம்
(1)புதிய விருந்தினர் தங்கும் விடுதி எதிரே உண்டு.
(2)விருந்தினர்களுக்கு புதிய தங்கும் விடுதி எதிரே உண்டு.
(3)புதிய விருந்தினர் தங்கும் புதிய விடுதி எதிரே உண்டு.
(4)விருந்தினர் தங்கும் புதிய விடுதி எதிரே உண்டு.

**84. வழுவற்ற** வாக்கியமாக அமைவது
(1)கூட்டத்திற்கு பதில் பல்கலைக்கழக துணைவேந்தர் தலைமை தாங்கினார்.
(2)கூட்டத்திற்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பதில் தலைமை தாங்கினார்.
(3)கூட்டத்திற்கு பதில் பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் தலைமை தாங்கினார்.
(4)கூட்டத்திற்கு பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் தலைமை தாங்கினார்.

**85. பொருத்தமற்ற** உதாரணம் இடம்பெறும் சொற்றொகுதியைத் தெரிவு செய்க.
(1)கூட்டுப்பெயர் - கடற்கரை, நூல்நிலையம், சமையலறை
(2)ஆக்கப்பெயர் - கூட்டாளி, சமூகவியல், மலர்ச்சி
(3)தொழிற்பெயர் - ஆடுதல், போகாமை, வந்தவன்
(4)மாற்றுப்பெயர் - அவன், நான், இது

**86.** பின்வருவனவற்றுள் எழுத்துப்பிழைகள் **உள்ள** வாக்கியம்
(1)நமது நாட்டின் கலாசாரம் சீரழிந்து போகின்றது.
(2)நாகரீக மோகத்தால் பண்பாடுகள் சீரழிந்து செல்கின்றன.
(3)பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா கடந்தவாரம் நடைபெற்றது.
(4)சுகவீனம் காரணமாக தலைவர் கூட்டத்திற்கு சமூகமளிக்கவில்லை.

**87.** பின்வருவனவற்றுள் எழுத்துப்பிழைகள் **அற்ற** வாக்கியம்
(1)தீயன அனைத்தையும் அழித்தொளிக்க வேண்டும்.
(2)ஞாயிற்றுக்கிளமைகளில் வளக்கமாகச் சந்தைக்குச் செல்வதுண்டு.
(3)இருட்டுக்குள் ஒழிந்திருந்த திருடன் பிடிபட்டான்.
(4)நல்லதொரு வம்சாவளியிலே வந்தவன் என்பது அவனது நடத்தைகளில் தெரிகின்றது.

**88.** பின்வருவனவற்றுள் எழுத்துப்பிழைகள் **அற்ற** வாக்கியம்
(1)நாட்டின் பொருளாதாரம் மேம்பட இளைஞர் உளைக்க வேண்டும்.
(2)இன்று முழுவதும் அடமழை பெய்ததால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.
(3)ஆரபி சுகவீனம் காரணமாக இன்று பாடசாலைக்குச் சமுகமளிக்கவில்லை.
(4)நாகரீக வளர்ச்சிக்கேற்ப மனிதனின் நடையுடை பாவனைகளில் மாற்றம் காணப்படுகின்றது.

**89.** பின்வரும் வாக்கியங்களுள் **வேறுபட்ட** கருத்தினைத்தரும் வாக்கியம்
(1)நீ அல்லது நான் இதனைச் செய்ய வேண்டும்.
(2)நீயாவது நானாவது இதனைச் செய்ய வேண்டும்.
(3)நீயும் நானும் இதனைச் செய்ய வேண்டும்.
(4)நீயேனும் நானேனும் இதனைச் செய்ய வேண்டும்.

**90.** பின்வருவனவற்றுள் **சரியாக** எழுத்துக் கூட்டப்பட்ட சொல் வரிசையைத் தெரிவுசெய்க.
(1)குறிக்கோள், மேற்க்கோள், வேண்டுகோள், கருதுகோள்
(2)திணைக்களம், களஞ்சியம், கொந்தளிப்பு, ஊழியம்
(3)வளர்ச்சி, உயர்ச்சி, தொடற்சி, தளர்ச்சி
(4)சம்பளம், கம்பழம், உளவியல், நாளங்காடி

**91.** பின்வருவனவற்றுள் **பொருத்தமான** நிறுத்தற்குறியீடுகள் இடப்பட்டு எழுதப்பட்டுள்ள வாக்கியமாக அமைவது
(1)கண்ணா, உனக்கு அடித்தவர் யார்? ஏன் அழுகிறாய்? எனத் தந்தை வினவினார்.
(2)"கண்ணா, உனக்கு அடித்தவர் யார் ஏன் அழுகிறாய்?" எனத் தந்தை வினவினார்.
(3)"கண்ணா, உனக்கு அடித்தவர் யார்? ஏன் அழுகிறாய்?" எனத் தந்தை வினவினார்.
(4)"கண்ணா, உனக்கு அடித்தவர் யார்? ஏன் அழுகிறாய்? எனத் தந்தை வினவினார்

**92.** பின்வருவனவற்றுள் **சரியாக** எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல் வரிசை
(1) தேர்ச்சி, ஆராட்சி, தளர்ச்சி, இகழ்ச்சி
(2) உடைமை, கயமை, தகமை, பகைமை
(3) உற்சவம், நிச்சயம், முகூர்த்தம், நாகரிகம்
(4) கட்சி, ஆட்சி, மீட்ச்சி, மாட்சி

**93.** "உமது புத்தகம் எங்கே?" என்று ஆசிரியர் கேட்டபோது மாணவன்,
(1) "தான் அதைத் தொலைத்துவிட்டேன்" என்றான்.
(2) "நான் அதைத் தொலைத்துவிட்டேன்" என்றான்.
(3) தான் அதைத் தொலைத்துவிட்டேன் என்றான்.
(4) நான் அதைத் தொலைத்துவிட்டேன் என்றான்.

**94.** பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழைகள் **அற்ற** வாக்கியம்
(1) செய்ந்நன்றியை ஒருபோதும் மறக்கக்கூடாது.
(2) பயிற்செய்கையும், விலங்கு வேளாண்மையும் இணைந்ததே விவசாயமாகும்.
(3) சென்றொழிந்த காலம் திரும்பி வரமாட்டாது.
(4) அரசியல் பிரச்சனைகளால் அகதிகளாவோர் தொகை அதிகரித்துச் செல்கின்றது.

**95.** அந்த விபத்து நடந்தமைக்கு வீதியின் சீர்கேடும்
(1) பிரதான காரணமாய் அமைந்தது.
(2) பிரதான காரணம்.
(3) ஒரு காரணமாய் அமைந்தது.
(4) முதன்மைக் காரணமாகிவிட்டது.

**96.** பின்வருவனவற்றுள் எழுத்துப்பிழைகள் **அற்ற** வாக்கியம்
(1) நேர்முகப் பரீட்சையில் கல்வித் தகமைகள் பரிசீலிக்கப்பட்டன.
(2) சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நகர வீதிகளைத் துப்புரவு செய்தனர்.
(3) பௌதீக வளங்களைப் பேணிப் பாதுகாப்பது எமது கடமையாகும்.
(4) இன்றைய இளைஞர் சமுதாயம் நாகரீக வாழ்க்கையைப் பெரிதும் விரும்புகிறது.

**97.** பின்வருவனவற்றுள் **சரியாக** எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல் வரிசையாக **அமைவது**
(1) வளர்ச்சி, தளர்ச்சி, மலர்ச்சி, பயிற்சி
(2) நுன்மை, செந்தண்மை, வெண்மை, சேய்மை
(3) அருவம், அவளம், குற்றம் பெருக்கம்
(4) தூற்றுதல், தோன்ரல், வாழ்த்தல், திரிதல்

**98.** பின்வருவனவற்றுள் **வழுவற்ற** வாக்கியம்
(1) அதிகாலையில் நாய்கள் குரைத்தது.
(2) கணனிகள் இயங்கியது.
(3) வானம் கறுத்து மழை பொழிந்தது.
(4) அம்மா சமையல் வேலையில் ஈடுபட்டது.

**99.** இராஜராஜ சோழனுடைய பெருமைகளை எடுத்துரைக்கின்ற …….. பல சாசனங்களிலே காணப்படுகின்றன.
1. மெய்க்கீர்த்திகள் 2. கீர்த்தனைகள் 3. புனைந்துரைகள் 4. ஆவணங்கள்

**100.** வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையை ஈடு செய்வதற்காக அரசாங்கம் புதிய …… விதிக்கவுள்ளது.
1. பிரேரணைகளை 2. மானியங்களை
3. கடன்களை 4. வரிகளை

**101 தொடக்கம் 105 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களிலும் நான்கு சோடிச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மூன்று சோடிச் சொற்கள் குறித்தவொரு இயல்புக்கு அமைய ஒன்றுடனொன்று தொடர்புடையன. அவ்வாறு அமையாத சோடியைத் தெரிவு செய்க.**

**101.** 1. நடனம் - ஆடுதல் 2. கதை – வாசித்தல்
3. பாட்டு – கிரகித்தல் 4. ஓவியம் - வரைதல்

**102.** 1. கப்பல் - படகு
2. மேசை – கதிரை
3. பேனை – பென்சில்
4. அரிவாள் - கோடரி

**103.** 1. மயில் - அகவும்
2. குயில் - கூவும்
3. கிளி – பார்ப்பு
4. பல்லி – சொல்லும்

**104.** 1. கட கட – சல சல
2. பெரிய பெரிய – சிவந்த சிவந்த
3. பட பட – வெட வெட
4. குடு – குடு – குபு குபு

**105.** 1. தீர்ப்பு – தண்டனை
2. பரீட்சை - பெறுபேறு
3. சிகிச்சை - குணமடைதல்
4. வியாபாரம் - இலாபம்

**105 தொடக்கம் 110 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களிலும் நான்கு சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மூன்று சொற்கள் குறித்தவொரு இயல்புக்கு அமைய ஒன்றுடனொன்று தொடர்புடையன. அவ்வாறு அமையாத சொல்லைத் தெரிவு செய்க.**

**106.** 1. பொலிஸ்மா அதிபர் 2. விகாராதிபதி 3. உபவேந்தர் 4. அதிபர்

**107.** 1. வட்டம் 2. உருளை 3. கூம்பு 4. நான்முகி

**108.** 1. விருந்து 2. கருத்து 3. மருந்து 4. அருந்து

**109.** 1. கோதை 2. தொடை 3. கண்ணி 4. வீ

**110.** 1. உலா 2. கோவை 3. நாவல் 4. பிரபந்தம்

**111 தொடக்கம் 115 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களிலும் உள்ள நான்கு சொற்களில் குறித்தவொரு இயல்புக்கு அமைய மூன்று சொற்கள் ஒன்றுடனொன்று தொடர்புடையதாகக் காணப்படும் அதேவேளை ஒரு சொல் வேறுபாடுடையது. அவ்வாறு வேறுபட்டமையும் சொல்லைத் தெரிவு செய்க.**

**111.** 1. விரியன் 2. பாம்பு 3. மலைப் பாம்பு 4. சாரை

**112.** 1. அரண்மனை 2. குடிசை 3. சிறை 4. வீடு

**113.** 1. எ 2. ஆ 3. உ 4. ஒ

**114.** 1. கிட்டத்தட்ட 2. திட்டவட்டமாக 3. ஏறக்குறைய 4. கிட்டமுட்ட

**115.** 1. சுண்டிக்குளம் 2. பின்னவெல 3. வில்பத்து 4. யால

**120 தொடக்கம் 123 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களிலும் மூன்று சோடி விடைகள் தமக்கிடையே ஏதோவொரு தொடர்புடையவையாகவும், ஒரு சோடி விடை மாத்திரம் வேறுபட்டதாகவும் காணப்படுகின்றது. அவ்வாறு வேறுபடும் விடையைத் தெரிவு செய்க.**

**116.** 1. சிறுகதை – நாவல்
2. பத்திரிகை – சஞ்சிகை
3. உயிரெழுத்து – மெய்யெழுத்து
4. கத்தி – மரம்

**117.** 1. உழுந்து - பயறு
2. கூம்பு – நான்முகி
3. சதுரம் - செவ்வகம்
4. பாடசாலை – கட்டிடம்

**118.** 1. கார் - கொண்டல்
2. வீடு - மனை
3. கடல் - சாகரம்
4. பறவை - மயில்

**124 தொடக்கம் 130 வரையுள்ள பழமொழிகளுக்கான கருத்தை ஒரு தொடரில் அல்லது தனி வாக்கியத்தில் தருக.**

**119.** ஆடமாட்டாதவள் அரங்கு பிழையென்றாளாம்.

.....

**120.** இட்டுக்கெட்டார் எங்குமில்லை.

.....

**121.** குப்பையிற் கிடந்தாலும் குன்றுமணி மங்காது.

.....

**122.** ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது.

.....

**123.** அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.

.....

**124.** உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

.....

**125.** கந்தையானாலும் கசக்கிக் கட்டு.

.....

# ஆக்கத்திறன்

## 01

**பின்வரும் தனி வாக்கியங்கள் ஒவ்வொன்றையும் ஒரு வாக்கியமாக எழுதிக் காட்டுக.**

**1.** நான் கொழும்புக்குப் போனேன் நீ கொழும்புக்குப் போனாய்

.....

**2.** எனக்கு சிங்களம் பேசத் தெரியும் எனக்கு சிங்களம் எழுதத் தெரியும்

.....

**3.** நீ பாடு நீ ஆடு

.....

**4.** புகையிரதம் வழமையாக எட்டு மணிக்கே புறப்படும்
புகையிரதம் இன்று ஒன்பது மணிக்கே புறப்பட்டது

.....

**5.** வயலுக்கு குளத்திலிருந்து தண்ணீர் இறைத்தார்கள்
வயலுக்கு வாய்க்காலிலிருந்து தண்ணீர் இறைத்தார்கள்

.....

## 02

**பின்வரும் பந்திகள் ஒவ்வொன்றினதும் சாராம்சத்தை ஒரு வாக்கியத்தில் எழுதிக் காட்டுக.**

**1.** நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில்நுட்பமும் ஆங்காங்கு ஒளிபரப்பும் மின்விளக்குகள் போல் இருக்கின்றன. அவற்றுள் சில பிரகாசமாகவும் இருக்கலாம். ஆனால் அவை பரவலாக அங்கிக்கெனாதபடி எங்கும் ஒளிவீசும் முழுநிலவு போன்றில்லை.

.....

.....

**2.** மாறாத எதுவும் வளர்ச்சியடைவதில்லை. மொழி இதற்கு விதிவிலக்கு அல்ல. வாழும் மொழிகளெல்லாம் இடையறாது மாற்றத்திற்கு உள்ளாகின்றன. மாற்றமும் வளர்ச்சியும் ஒரு நிகழ்ச்சியின் இரு அம்சங்களாகும். மொழி ஒரு சமூக சாதனம் என்ற வகையில் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களும் வளர்ச்சிகளுமே மொழி மாற்றத்தையும் வளர்ச்சியையும் இறுதியாகத் தீர்மானிக்கின்றன.

.....

.....

**3.** வாழ்வுக்கு இனிமை தருவது அன்பு. இயங்குகின்ற இயந்திரத்திற்கு எண்ணெய் போட்டால் அது தடங்கலின்றி இயங்குகின்றது. அந்த எண்ணெய்க்கு நிகரானது அன்பு. அன்புடையவர்களே எங்கு சென்றாலும் வாழ்வை நன்கு நடத்துபவர்கள் ஆகின்றனர்.

.....

.....

## 03 பின்வரும் உரைநடைப் பகுதிகள் ஒவ்வொன்றினையும் 40 45 சொற்களில் சுருக்கி எழுதுக.

**1.** இன்றைய காலகட்டத்தில் தொடர்பாடல் என்பது மிகப் பிரபல்யமானதும் அவசியமானதுமான ஒரு செயற்பாடாகி விட்டது. இன்று முழு உலகுமே ஒரு கிராமம் என்ற வகையில் சுருங்கிவிட்டமைக்கும், நெருங்கிவிட்டமைக்கும் இத் தொடர்பாடல் விருத்தியே அடிப்படைக் காரணமாகவிட்டது எனலாம். பழமை மிக்க தொடர்பாடல் முறையான கடிதம் முதல் தொலைபேசி, தொலைநகல் (பக்ஸ்), தொலைப்பதிவு (டெலக்ஸ்), இலத்திரணியல் தபால் (ஈ.மெயில்) போன்ற பல்வேறு ஊடகங்களும், அகில உலகத்தையே ஆட்டிப்படைக்கின்றன. மேற்கூறப்பட்ட பல்வேறு வகையான சாதனங்கள் தோற்றம் பெற்றுவிட்ட போதும், மனிதப் பண்பும் நேயமும் மிக்க நேரடித் தொடர்பாடலானது எல்லாவற்றிலும் மேலானது என்று கூறலாம். உயர்ந்த அறிவும் ஆற்றலும் விஞ்ஞானத்தின் வியத்தகு சாதனைப் போக்கும் மிக்க மனிதன் தனது நாளாந்தத் தொடர்பாடலை பண்புடனும் சிறப்புடனும் மேற்கொண்டு, ஊடாடும் உறவாடும் தன்மைகளைத் தன்னுள் வளர்த்துக்கொள்ளல் மிக அவசியமாகும்.

எமது நாளாந்த வாழக்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களின் போதும், தேவைகளின் போதும், நாம் பல்வேறு வகைப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அத்தகைய தொடர்பாடலானது பல்வேறு மட்டங்களில் இடம்பெறக்கூடும். வயதில் கூடியோருடனோ குறைந்தோருடனோ சமவயதுடையோருடனாகவோ இருக்கலாம். நம்மை விட அறிவிலும், ஆற்றலிலும், கல்வியிலும், செல்வத்திலும் சிறப்புப் பெற்றவர்களுடனாகவும் இருக்கலாம். நமது நாட்டவர்களுடன் மட்டுமன்றி வேறு நாட்டவர்களுடனாகவும் இருக்கலாம். இவ்வாறு பல்வேறு வகைப்பட்டவர்களுடனும் நாம் தொடர்பாடல் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் நிகழ்காலத்தில் மட்டுமன்றி வருங்காலத்திலும் ஏற்படலாம். இதற்கு இசைவாக நாம் தொடர்பாடலை திறம்பட மேற்கொள்ளும் ஆற்றல், பண்பு என்பவற்றை வளர்த்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக நாம் நீதிமன்றத்திற்குச் செல்லும் சந்தர்ப்பத்தை எடுத்துக் கொள்வோம். இவ்விடத்தில் நாம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைப் பின்பற்றி பண்புடன் நடந்துகொள்ளவில்லையெனின் கண்டிப்புக்கும் தண்டனைக்கும் ஆளாக நேரிடலாம்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**2.** ஓலை போட்ட குடிசையிலே இருந்து மாடிவீடு வரை நாகரிகம் வளர்ந்திருக்கின்றது. மொழியும் படிப்படியாக எத்தனையோ வளர்ச்சி பெற்று இன்றைய நாகரிகமான நிலைக்கு வந்திருக்கின்றது. குடிசை கட்டுவது அந்தப் பழங்காலத்தில் முதன்முதலில் ஒரு பெரிய வித்தையாக இருந்திருக்கும். இப்போதும், பத்து அடுக்குள்ள மாடிவீடு கட்டுவது பெரிய கலையாக இருக்கின்றது. மொழியும் அப்படித்தான். மிகப் பழங்காலத்திலும் மிகவும் அருமையான கலையாக இருந்து வளர்ந்து வந்தது. இன்றைக்கும் மிகவும் அருமையான கலையாக வளர்ந்து வருகின்றது. ஆனால் ஒன்று, நாம் வீடுகட்ட வேண்டுமானால் நினைத்தபடி நம் விருப்பம்போல கட்டிக்கொள்ளலாம். இன்னொருவரைப் பற்றிக் கவலைப்படாமல் நம் வீட்டை நாம் கட்டிக்கொள்ளலாம். வீடு. தனித்தனியாக அவரவர் விருப்பம்போல அமையும் கலை. தனிப்பட்டவரின் கலை. ஆனால், மொழி அப்படிப்பட்டது அல்ல. மொழி தனிப்பட்டவரின் கலை அல்ல. எல்லோரும் சேர்ந்து ஒருமனமாய் வளர்க்கும் கலையே மொழி. இதனால் அதைச் சமூகக்கலை என்று சொல்ல வேண்டும். நாய்க்கு நான்கு கால்கள் இருப்பதைப் பார்த்து நாற்காலி என்று நாம் பெயர்வைக்க முடியுமா? நாம் நாயை நாற்காலி என்றால் மற்றவர்கள் ஒத்துக்கொள்வார்களா? ஒருகாலும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். ஆகவே எல்லோரும் ஒத்துக்கொண்டால்தான் ஒரு பெயர் நிற்கும். இப்படி ஒரு மொழியிலுள்ள ஒவ்வொரு சொல்லும் எல்லோரும் ஒத்துக்கொண்டால்தான் மொழியாக வாழ முடியும். இதனால் மொழி என்பது எவ்வளவு பெரிய ஒரு சமூகக்கலை என்பது தெரிகின்றது. இன்றைய அரசாங்கம் எல்லோருக்குமுள்ள குடியரசு என்றும், ஜனநாயகம் என்றும் சொல்கின்றோம். குடியரசு முறையில் மிக மிகப் பழங்காலம் முதல் ஏற்பட்டுவரும் கலை மொழிதான்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

## 04

**கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியை வாசித்துக் கிரகித்து, அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.**

பேபைரஸ், தோல், பனையோலை ஆகிய பண்டைக்காலத்து எழுதுகருவிகளில் எழுதப்பட்ட எழுத்துக்கள் முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி முதலிய குறியீடுகளைக் கொண்டிருக்கவில்லை. அன்றியும் சொற்களைத் தனித்தனியே பிரித்தெழுதாமல் ஒரே கோவையாக எழுத்துக்கள் எழுதப்பட்டன. இவ்வாறு எழுதப்பட்ட சுவடிகளைப் படிப்பது கடினமாகவும் வருத்தமாகவும் இருந்தது. பழக்கப்பட்டவர்கள் மட்டுமே இவற்றை படிக்க முடியும். பழக்கப்பட்டவர்களுக்கும் தொடரைப் புரிந்துகொள்வது கடினமாக இருந்தது. மேல் நாட்டார் கி.பி இரண்டாம் நூற்றாண்டில், சொற்களைப் பிரித்து எழுதத் தொடங்கினார்கள். இன்னும் பிற்காலத்தில் புள்ளிகள் முதலிய குறியீடுகளை வழங்கினார்கள். நமது நாட்டு ஓலைச் சுவடிகளில் முற்றுப்புள்ளி முதலிய குறியீடுகள் அமைக்கப்படவில்லை.

**1.** பண்டைக் காலத்தில் எழுது கருவிகளாகப் பயன்பட்டவை எவை?

.....

**2.** பண்டைக் காலத்தில் எழுதப்பட்ட சுவடிகளைப் படிப்பது கடினமானதாக இருந்தமைக்கான காரணங்கள் யாவை?

.....

.....

**3.** எழுத்து வழக்கில் குறியீடுகளை முதன் முதலில் பயன்படுத்தியவர்கள் யார்?

.....

**4.** சுவடிகள் படிப்பதை இலகுவாக்க, முதலில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது?

.....

.....

**5.** இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுத்தற்குறிகள் எவை?

.....

## 05

**கீழே தரப்பட்டுள்ள தலைப்பினை அடிப்படையாகக் கொண்டு 100 சொற்களுக்கு குறைவுறாமல் கடிதம் ஒன்றை வரைக.**

**1.** உமது கிராமத்தில் வழங்கப்பட்டு வரும் நிரந்தர வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடொன்று கிடைக்கப்பெறாது பாதிக்கப்பட்டவராக உம்மைக் கருதிக்கொண்டு, உமது குடும்ப மற்றும் பொருளாதார நிலைமையை சுட்டிக்காட்டியும், வீடொன்றின் அவசியப்பாட்டை வலியுறுத்தியும் பிராந்திய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதுக. *(பிரதிகளை பிரதேச செயலாளர், கிராம அலுவலகர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கவும்)*

**மேற்படி கடிதத்தை எழுதுவதற்கான கட்டமைப்பு:**

**(1)** முகவரியும் திகதியும் **(**எழுதுபவருடையது**)**
**(2)** உள் முகவரி **(**பெறுபவருடையது**)**
**(3)** தலைப்பு
**(4)** விடயம்
**(5)** நன்றி
**(6)** முடிப்பு
**(7)** ஒப்பம்
**(8)** பிரதிகள்
  i. பிரதேச செயலாளர்
  ii. கிராம அலுவலகர்

## 06

**கீழே தரப்பட்டுள்ள தலைப்புக்களில் யாதேனுமொன்றை அடிப்படையாகக் கொண்டு 250 சொற்களுக்குக் குறைவுறாமல் கட்டுரை ஒன்றை வரைக. [பொருத்தமான தலைப்பிடுக]**

**1.** உலகக் காலநிலை மாற்றம்

**2.** இலங்கையின் உல்லாசப் பிரயாணக் கைத்தொழில்

**3.** வெளிநாட்டு வேலைவாய்ப்புகளும் அதனால் ஏற்படும் பாதிப்புகளும்

**4.** பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்துதல்

**5.** இலங்கையில் மும்மொழிச் சமூகமொன்றைக் கட்டியெழுப்புதலின் அவசியம்

**6.** உலகமயமாதலும் அதன் போக்குகளும்

**7.** போதைப்பொருள் பாவனையும் அதன் விளைவுகளும்

**8.** நவீன தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

* * * *

Complied By:
Mr. A.Kajan B.A Tamil (R)
Management Assistant,
Zonal Education Office – Thunukkai.

பயிற்சியே வெற்றியின் படிக்கல்